*3*

# பரலோகம் இல்லத்திற்கு உதவுகிறது

## (1 இராஜாக்கள் 17:8-16)

உலையினூடே கடந்து செல்லுதல் என்பது வேதாகமம் அடிக்கடி பயன்படுத்துகிற விவரிப்பாக உள்ளது. இந்த கணத்திற்கு, உருக்கும் உலை ஒன்றை அதன் மிக வெப்பமான நிலையுடன் கற்பனை செய்ய முயற்சி மேற்கொள்ளுங்கள். உலோகமானது குமிழியிடும் மொத்தையாகக் குறைக்கப்படுகையில், கசடு மேல்பகுதிக்கு வருகிறது மற்றும் அது ஆடைபோல எடுக்கப்படுகிறது. திரவநிலையில் உள்ள உலோகம் பக்குவப்படுத்தப்பட்டு பின்பு எண்ணெய் அல்லது உவர் நீருக்குள் அமிழ்த்தப்படுகிறது. உலோகமானது கரைசலுக்குள் மூழ்கடிக்கப்படுகையில், அது வேதனையில் அலறுவதாகக் காணப்படுகிறது. சுத்திகரிக்கும் செயல்முறைக்குப் பின்பு அந்த உலோகமானது அதிகமாக நீடித்து உழைப்பதாக, அதிகம் நெகிழ்வுடையதாக, அதிகம் பயன்படுத்தக் கூடியதாக மற்றும் அதிகம் மதிப்பு உள்ளதாக இருக்கிறது. இருப்பினும் அந்த நிலையை அடைவதற்கு அது உலைக்களத்தினூடே செல்ல வேண்டியதாக இருந்தது.

இன்றைய நாட்களில் உலையினூடே கடந்து செல்லுதல் என்பதாக விவரிக்கப்படக்கூடிய விஷயம் ஏதாவது உள்ளதென்றால், அது இல்லமாக உள்ளது. இல்லம் என்பது எப்படியிருக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது: அது வாழ்வு முழுவதற்குமான திருமணத்தை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் (மத்தேயு 19:3-9); அது அன்பு மற்றும் பரஸ்பர ஊக்கம் ஊட்டுதலுக்கான இடமாக இருக்க வேண்டும் (எபேசியர் 5:22-33; 6:1-4). இருப்பினும், இன்றைய நாட்களில் சமூகத்தில், இல்லத்தை அழிப்பதாகக் காணப்படுகிற புறம்பான அழுத்தங்கள் எண்ணற்றவைகளாக உள்ளன. திருமணத்தின் புனிதத்தன்மையை அல்லது இல்லத்தையும் குடும்ப உறவுகளையும் மதித்தல் என்பது கொஞ்சமாகவே உள்ளது. நமது சகப்பணியாளர்கள், விவாகரத்து மற்றும் "சுதந்திரம்" என்பவை எவ்வளவு அற்புதம்நிறைந்தவைகளாக உள்ளன என்பது பற்றிய கருத்துக்களை நமக்கு விற்க விரும்புகின்றனர். திருமணம் மற்றும் இல்லம் போன்ற உண்மையில் பொருட்படுத்தப்பட வேண்டிய விஷயங்களுக்கு மேலாக, உலகப்பொருள் தொடர்பான விஷயங்கள் அதிகமாக வலியுறுத்தப் படுகின்றன. இதன்விளைவாக, மகிழ்ச்சியற்ற இல்லங்கள், முறிந்துபோன இல்லங்கள். கைவிடப்பட்ட இல்லங்கள் ஆகியவை உண்டாகின்றன.

பல இல்லங்கள் உலையினூடே கடந்து செல்லுகின்றன என்பது மோசமான செய்தியாக உள்ளது. உலையில் உயிர்பிழைத்திருக்கும் இல்லங்கள் பலமானவைகளாக, மேன்மையானவைகளாக மற்றும் அதிகம் மதிப்புள்ளவைகளாக

*இருக்கும் என்பது நல்ல செய்தியாக உள்ளது!*

*"அக்கினிச் சூளை" அல்லது "உருக்கும் கலசம்" என்பதே "சாறிராத்" என்பதன் அர்த்தமாக உள்ளது, இது எலியா தேவனிடத்தில் இருந்து தமக்கு அறிவுறுத்தல் வரக் காத்திருந்த நகரமாக இருந்தது. இந்த நகரத்தில் பார்வையில் படும்படியாக ஒரு உலோக உருக்காலை இருந்த காரணத்தினால் இதற்கு இப்பெயர் வந்திருக்கச் சாத்தியக்கூறுள்ளது. சாறிபாத் நகரம் எலியாவுக்கு ஒரு உலையாக, அவர் இன்னும் இரண்டு ஆண்டுகள் மறைவாகவும் செயலற்றும் இருக்க வேண்டிய வேளையில் அவரைச் சோதிக்கும் இடமாக இருந்தது. இருப்பினும் விசேஷமாக சாறிபாத்தில் எலியா தங்கியிருந்த ஒரு சிறு இல்லத்திற்கு ஒரு உலையாக இருந்தது (1 இராஜாக்கள் 17:8-34).*

*அந்த இல்லத்தையும், அதன் போராட்டங்களையும் மற்றும் அதற்குத் தேவன் உதவிய வகையையும் குறித்து நாம் ஆய்வுசெய்வோமாக.*

## பரலோகத்தின் அக்கறை

*கேரீத் ஆற்றில் தண்ணீர் வற்றிய பின்பு எலியா என்ன செய்தார்?*

> *அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு [எலியாவுக்கு] உண்டாயிற்று, அவர்: நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார் (1 இராஜாக்கள் 17:8, 9).*

*வேதவசனம், "உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன்" என்று கூறுகிறது. சாதாரணமாக இது, எலியா அங்கு சென்று சேரும்போது ஒவ்வொரு விஷயமும் தயாராக இருக்கும்படிக்குப் போதுமான ஆயத்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் என்று அர்த்தப்படுவதாக இருக்கும், ஆனால் இங்கு விஷயம் அப்படி இருப்பதில்லை. ஒருவேளை இது, (தீர்க்கதரிசனக் கடந்தகால வினைச் சொல்லைப் பயன்படுத்துவதென்றால்) "நான் ஒரு விதவையைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் மற்றும் உன் மூலமாக அவளுக்குக் கட்டளையிடுவேன்" என்று மாத்திரமே அர்த்தப்படலாம்.*

*KJV வேதாகமத்தில், "உன்னை ஆதரிக்கும்படி, அங்குள்ள ஒரு விதவைப் பெண்ணுக்குக் கட்டளையிட்டிருக்கிறேன்" என்றுள்ளது. மூல எபிரெய வசனத்திலும் இவ்வாறே நேரடிப்பொருளில் உள்ளது. "விதவைப் பெண்" என்பது ஆங்கில மொழியில் மிகையான கூற்றாக உள்ளது, ஆனால் பழங்கால மொழிகளில் அவ்வாறு இருப்பதில்லை. இது இந்தப் பெண்ணின் ஊறுபடத்தக்க இயல்பை அடிக்கோடிடுகிறது. அவள் ஒரு பெண்ணாக இருந்தாள் மற்றும் அவள் உணவை ஈட்டவேண்டியவர் யாரும் இல்லாதவளாக இருந்தாள்.*

*10ம் வசனம், எலியாவின் பதில்செயல் பற்றிக் கூறுகிறது: "அப்படியே அவன் எழுந்து, சாறிபாத்துக்குப் போனான்." விரோதிகளின் எல்லைப் பகுதியில், எலியாவை ஒவ்வொருவரும் வேட்டையாடிக்கொண்டிருந்த ஒரு பகுதியில், எழுபத்தி ஐந்து முதல் நூறு மைல்கள் வரையில் எலியா கடந்து சென்று, பாகால் வணக்கத்தின் இருதயம் போன்ற மையைப் பகுதிக்கே அவர் செல்ல வேண்டியதாக இருந்தது. சாறிபாத் என்பது தீரு மற்றும் சீதோன் ஆகியவற்றிக்கு இடையில் கடற்கரை ஓரமாக இருந்த ஒரு சிறு நகரமாகும். சாறிபாத் நகரில்*

*இருந்து ஒரு பதினைந்து நிமிடங்கள் நடந்து சென்றால், அவர் சீதோனைக் காண்பார், அது யேசபேலின் சொந்த நகரமாக இருந்தது. இருப்பினும் எலியா விவாதம் செய்யாமல் சென்றார்.*

*"அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு அவன் வந்தபோது, அங்கே ஒரு விதவை ..." (வசனம்10ஆ). இவள்தான் தாம் எதிர்பார்த்தவள் என்று எலியா எவ்வாறு அறிந்தார்? ஒருவேளை ஏதோ ஒரு தெய்வீக செய்தியால் அறிந்திருக்கலாம், ஆனால் அனேகமாக அவளது "விதவைக்குரிய உடைகளினால்,"[1] தாம் அவளுக்குக் கொடுத்த பரீட்சை ஆகியவற்றினால் அதை அவர் அறிந்திருக்கலாம், எந்த வகையிலும், எலியா அந்த நகருக்கு வந்தபோது, தம்மைப் பராமரிக்கத் தேவன் அருளியிருந்த ஒருத்தியை முதலாவதாகக் காண்கிறார். தேவனுடைய ஏற்பாடுகள் திகைப்புக்கு உரியவைகள் அல்லவா?*

*இருப்பினும் அந்த விதவை என்ன செய்துகொண்டிருந்தாள்?*

> *அங்கே ஒரு விதவை விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள்; ... அதற்கு அவள்: பானையில் ஒரு பிடி மாவும் கலத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று ... சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள் (வசனங்கள் 10இ, 12).*

*தேவன் சாறிபாத் ஊரில் இருந்த தண்ணீரையும் வற்றிப்போகச் செய்திருந்தார் (வசனம் 14). உலகப் பிரகாரமான எழுத்தாளர்களும், பெனிக்கியா தேசம் வரைக்கும் இந்தப் பஞ்சம் சென்றடைந்திருந்த உண்மைக்குச் சாட்சியளிக்கின்றனர். இஸ்ரவேலை மோசம்போக்கியிருந்த துன்மார்க்கத்திற்குப் பெனிக்கியர் தேசம்தான் ஆதாரமூலமாக இருந்தது; அந்தத் தேசமும் துன்புற வேண்டும் என்பது பொருத்தமானதாகவே இருந்தது.*

*அந்த விதவை ஒரு சில விறகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள், அவள் இறக்கத் தயராக இருந்தாள். அவள் விறகுபொறுக்கிக் கொண்டிருக்கையில் அவளது மகன் எங்கிருந்தான்? ஒருவேளை அவன் உணர்விழந்த நிலையில் அவள் திரும்பிவருவதற்காகக் காத்திருந்து படுக்கையில் கிடந்திருப்பான். அவளது சிந்தையில் இதுவே பூமியின்மீது அவளது கடைசி நாளாக இருந்தது.*

*எலியா, சாறிபாத் ஊருக்கு வந்து சேருவதற்கு, அபாயமான மற்றும் இருதயத்தை முறித்துப்போடும் எழுபத்தி ஐந்து முதல் நூறு மைல்கள் வரையிலான மைல்கள் பயணம் செய்திருந்தார். அவர் அங்கு வந்து சேர்ந்துபோது, அது சாத்தியமான வகையில் அவர் கற்பனை செய்திருந்திருக்கக் கூடியதைக் காட்டிலும் மிகவும் மோசமான சூழ்நிலையாக இருந்தது. நீங்கள் எப்போதாவது, வேறொரு ஊருக்கு இடம் பெயர்ந்து, அல்லது ஒரு புதிய பள்ளிக்குச் செல்வதற்கு அல்லது ஒரு புதிய வேலையைத் தொடங்குவதற்கு கடந்து சென்று, நீங்கள் மிக மோசமான சூழ்நிலைக்கு ஆயத்தமாக இருப்பதாக நினைத்து இருக்கிறீர்களா? உங்களுக்கு நீங்களே, "அது மோசமானதாக இருக்கப்போகிறது!" என்று கூறிக்கொண்டீர்கள். இருப்பினும் நீங்கள் அங்கு சென்றுபோது, நீங்கள் கற்பனை செய்ததைக் காட்டிலும் விஷயம் இன்னும் அதிக மோசமானதாக இருந்தது.*

*எலியாவே, சாறிபாத்துக்கு உங்கள் வரவு நல்வரவாகுக!*

இருப்பினும், நாம் அந்த விதவையிடம் நமது கவனத்தைக் குவிக்கத் திரும்புவோமாக. அவள் இளம் வயதானவளாக இருந்தாள் என்பதே எனது யூகமாகும். நாம் காணப்போகிறபடி, அவளது மகன் இன்னமும் அவளது கைகளில் வைக்கப் படக்கூடியவனாக இருந்தான்.[2] அந்த நாட்களில், பெண்கள் மிகவும் சிறுவயதிலேயே திருமணம் செய்விக்கப் பட்டனர் மற்றும் அவர்கள் மிகவும் இளவயதாக இருக்கையிலேயே தங்கள் பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டனர்.

அவள் ஜீவன் நிரம்பியிருந்த ஒரு சிறுபெண் என்ற வகையில் நான் அவளைக் காணுகிறேன். அவள் திருமணம் முடித்திருந்தாள் மற்றும் ஒரு அழகிய ஆண்குழந்தையைக் கொண்டிருந்தாள். அவளது வாழ்வு முழுவதும் அவளுக்கு முன்பாக இருந்தது. பின்பு துன்பம் தாக்கியது. அவளது கணவர் இறந்து போனார், அவர் தமது வாழ்வின் உச்சத்தில் துண்டிக்கப்பட்டார். அவள் பராமரிக்க ஒரு குழந்தையுடன், வீட்டில் பொருள் ஈட்டுபவர் இன்றி விடப்பட்டாள். பின்பு பஞ்சம் வந்தது. அவளிடம் கொஞ்சமே எஞ்சியிருந்தது. அவள் தனது அற்பமான உணவுப்பொருள்களை நாளுக்குப் பின் நாளாக நீட்டித்தாள். இப்போது ஒரு கைப்பிடி மாவும் கொஞ்சம் எண்ணெயும் தவிர எல்லாம் செலவாகிப் போயிருந்தது. வயதில் இளையவளாக இருந்தாலும், அவள் தோற்றத்தில் முதியவள் போலிருந்திருக்க வேண்டும். அவள் வெளிறிப்போய், அவளது கைகள் தோல் மூடப்பட்ட எலும்புகள் போலிருந்தன. அவள் நம்பிக்கை அற்றவளாக இருந்தாள்; அவள் இறக்கத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

நாம் பின்வரும் சத்தியத்தை வலியுறுத்த நிதானிப்போமாக: *பரலோகம் அறிகிறது மற்றும் பரலோகம் அக்கறையாக உள்ளது!*

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் முழுவதிலும், விதவைகள் மீது பரலோகத்தின் மாபெரும் அக்கறை உள்ளது. யாத்திராகமம் 22:22ம் வசனம், "விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக" என்று கட்டளையிடுகிறது. உபாகமம் 14, 16, 24, மற்றும் 26ம் அதிகாரங்கள், அந்நியர்களுக்கும், தகப்பன் இல்லாதவர்களுக்கும், விதவைகளுக்கும் விசேஷ அளிப்புகளை ஏற்படுத்துகிறது. தனது மகனை இழந்துபோன நாயீன் பட்டணத்து விதவையின்மீது இயேசுவின் பரிவிரக்கத்தை நினைவில் கொள்ளுங்கள் (லூக்கா 7). அந்த வரலாற்றில் உள்ள பின்வரும் வார்த்தைகளில் அதிகமானவை பொதியப்பட்டுள்ளன: " அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்" (வசனம் 12). யாக்கோபு 1:27ல், ஏவுதல் பெற்ற எழுத்தாளர், "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிற" செயலானது மாசில்லாத சுத்தமான பக்தியின் அத்தியாவசியமான பாகமாக உள்ளதென்று கூறுகிறார்.

பரலோகமானது, விதவைகளின்மீது பொதுவான ஆர்வமுடையதாக மாத்திரம் இருந்ததில்லை; பரலோகமானது இந்த விதவையைப் பற்றிக் குறிப்பாக அக்கறையுடையதாக இருந்தது. 1 இராஜாக்கள் 17ல் நமக்குத் தரப்படாத உட்கண்ணோட்டம் லூக்கா 4ல் நமக்குத் தரப்பட்டுள்ளது. கப்பர்நகூமில் அற்புதங்கள் நிகழ்த்தும்படி இயேசுவுக்கு அறைகூவல் விடப்பட்டது. அதற்கு அவர் செயல்விளைவில், அற்புதங்கள் கண்மூடித்தனமாகச் செய்யப்பட்டிருந்ததில்லை, ஆனால் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையிலேயே செய்யப்பட்டன என்று பதில் அளித்தார். பின்பு அவர் அந்த சத்தியத்தைப் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு விவரித்தார்:

"அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை" (லூக்கா 4:25, 26).

எலியா சாறிபாத் ஊருக்கு எலியாவுக்கு உதவி செய்வதற்காக மாத்திரமல்ல, ஆனால் ஒரு குறிப்பிட்ட விதவைக்கு உதவிசெய்வதற்காகவும் அனுப்பப்பட்டார் என்று இயேசு கூறினார். அவளைத் தேவன் தேர்ந்துகொண்டார். அவளுடைய இடர்ப்பாடுகளைத் தேவன் அறிந்திருந்தார். தேவன் உதவி செய்ய விரும்பினார்.

இப்போது உங்கள் இல்லத்தில் நீங்கள் கடந்துசென்று கொண்டிருக்கிற இடர்ப்பாடுகளை நான் அறிவதில்லை. நீங்கள், ஒரு கிறிஸ்தவக் கணவராக அல்லது மனைவியாக, ஒரு கிறிஸ்தவத் தந்தையாக அல்லது தாயாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதுடன் போராடிக்கொண்டிருக்கலாம். வேறு எவரும் ஒருக்காலும் மதித்துணர மாட்டார்கள் என்ற பயங்கரமான அழுத்தங்களின் மத்தியில், நீங்கள் உங்கள் துணைக்கு அல்லது உங்கள் பிள்ளைகளுக்கு அர்ப்பணிக்க நேரமும் சக்தியும் கொண்டிருக்கும் வகையில் உங்கள் முன்னுரிமைகளைத் திட்டமிட முயற்சி செய்துகொண்டிருக்கலாம். ஒருவேளை ஒரு துண்டுத்தாள் மற்றும் சர்வவல்லவராகிய தேவன் முன்னிலையில் நீங்கள் ஏற்படுத்திய வாக்குறுதி ஆகியவை தவிர, உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் உள்ள உறவுமுறையானது மிகவும் கொஞ்சமாகும்படி சேதப்பட்டிருக்கலாம். ஒருவேளை தேவனுடைய குடும்பத்திற்கும் உங்களுக்கும் இடையிலான பிணைப்புகளைத் துண்டிக்கும்படியான அழுத்தங்கள் உங்கள் இல்லத்தில் இருக்கலாம்.

ஒருவேளை நீங்கள், பல வாரங்களாக அல்லது மாதங்களாகச் செலுத்தாது நிறுத்தி வைத்திருக்கும் கட்டணங்களைக் கொண்டிருக்கலாம், மற்றும் நீங்கள் உங்கள் தலைக்குமேல் ஒரு கூரையை மற்றும் மேஜையின்மீது உணவை எவ்வாறு ஈட்டுவது என்பதற்கான வழியைக் காணாமல் இருக்கலாம். ஒருவேளை உடல் நலமானது இல்லத்தின் உறவுகள் யாவற்றிலும் ஊறுவிளைவித்து இருக்கலாம். ஒருவேளை நீங்கள் மனதிலே மிகவும் ஆழமாகக் காயப்படுத்தப்பட்டு, அது ஒருக்காலும் ஆறாது என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் உங்கள் இளம் வயதுப்பிள்ளைகளை எவ்வாறு சரியான வழியில் - ஒரு கிறிஸ்தவ வழியில் - கையாள்வது என்று புரியாத நிலையில் இருக்கலாம். ஒருவேளை நீங்கள் ஏற்கனவே வளர்ந்துள்ள உங்கள் பிள்ளைகளுக்காக, இனி கண்ணீர் எதுவும் எஞ்சியிருக்கவில்லை என்று நினைக்கும் அளவுக்கு மிகவும் அதிகமாகக் கண்ணீர் சிந்தியிருக்கலாம். ஒருவேளை நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள் மற்றும் நீங்கள் எதனூடே கடந்துசெல்லுகிறீர்கள் என்பதை எங்குமுள்ள எவரொருவரும் உண்மையில் புரிந்துகொள்ள இயலாது என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

தேவன் அறிகிறார், தேவன் புரிந்துகொள்கிறார், தேவன் அக்கறையாக இருக்கிறார் என்று உணர்ந்து அறிதல் என்பது ஆச்சரியமானதாக இருப்பதில்லையா?

## பரலோகத்தின் நிபந்தனைகள்

இப்போது பரலோகத்தின் நிபந்தனைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். பரலோகம் உங்களுக்கு உதவ விரும்புகிறது, ஆனால் ஒரு குறிப்பிட்ட வகையிலான இல்லத்திற்கு மாத்திரமே பரலோகம் உதவ முடியும். நாட்டில் இருந்த எல்லா விதவைகளில் இருந்தும் இந்த விதவையைத் தேவன் தேர்ந்து கொண்டார் என்று லூக்கா 4 மறைமுகமாக உணர்த்துகிறது (வசனங்கள் 25, 26). அவர் மேம்போக்காக அப்படிச் செய்திருக்கலாம், ஆனால் விதிப்படி தேவன் தமது தேர்ந்துகொள்ளுதலை, பண்பின் அடிப்படையில் ஏற்படுத்துகிறார், மற்றும் இவ்விடத்திலும் விஷயம் அவ்வாறாகவே உள்ளது. நமது வசனப்பகுதி யில் சித்தரிக்கப்பட்டுள்ள இல்லத்தின் வகையைக் கவனியுங்கள்:

முதலாவதாக, இது கொடுக்கும் இல்லமாக இருந்தது.

எலியா, "நான் குடிக்கிறதற்குக் கொஞ்சம் தண்ணீர் ஒரு பாத்திரத்தில் எனக்குக் கொண்டுவா" என்று கூறினார் (1 இராஜாக்கள் 17:10), மற்றும் அதைக் கொண்டுவர அந்த விதவை சென்றாள் (வசனம் 11). அவள் இறந்துகொண்டிருந்தாள், ஆனால் இங்கு, வனாந்தரமான பகுதியில் நீண்ட பயணத்தினால் தூசிபடிந்த ஒரு மனிதர் இருந்தார். அவருக்குத் தண்ணீர் தருவதை அவளால் மறுக்க முடியவில்லை.

சில இல்லங்கள், பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையைக் கொண்டுள்ளன; மற்ற வைகளோ கொடுக்கும் சூழ்நிலையைக் கொண்டுள்ளன. இது கொடுக்கும் சூழ்நிலையைக் கொண்டிருந்த இல்லமாக இருந்தது.

ஒருவேளை இயேசு, தீர்க்கதரிசிகளை ஏற்றுக்கொள்ளுதல் பற்றிப் பேசியபோது, இந்த விதவையைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம்:

> தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; ... இந்தச் சிறியரில் ஒருவனுக்கு *ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும்* தன்பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 10:41, 42; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இரண்டாவதாக, இது விசுவாசத்தின் இல்லமாக இருந்தது.

அந்த விதவையினிடத்தில் எலியா அப்பம் கேட்டபோது, அவள் பின்வரு மாறு கூறினாள்: "என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று *உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு* சொல்லுகிறேன்" (வசனம் 12; என்னால் வலியுத்தப்படுகிறது). "கர்த்தர்" என்ற வார்த்தையானது தேவனுக்கான பரிசுத்தமான பெயரிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. சாறிபாத் கானான் நாட்டில் இருக்கவில்லை என்றாலும், அது அந்த நாட்டின் அருகாமையில் இருந்தது, மற்றும் அதன் குடிகள் இஸ்ரவேலின் தேவனைப் பற்றி அறியாதவர்களாக இருக்கவில்லை. பிற்பாடு அவளுக்குத் தேவனே கட்டளையிட்டார் என்பதால், தனக்கு எலியா சொன்னதைச் செய்யும்படிக்குச் சென்றாள். அந்த இடத்தில் அவளது விசுவாசம் அற்பமானதாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவள் தனது வாழ்வையும் தனது மகனுடைய வாழ்வையும் உண்மையான தேவனுடைய கரங்களில்

ஒப்புவிக்கக்கூடிய அளவுக்குப் போதுமானதாக இருந்தது.

இயேசுவின் சொந்த ஊழியத்தின்போது ஒருமுறை, அவர் சாறிபாத்தின் இந்த விதவை வாழ்ந்திருந்த பொதுவான பகுதிக்குப் பயணம் சென்றார். அங்கு அவர், கானானியப் பெண் ஒருத்தியை எதிர்கொண்டார். இந்தப் புறஜாதிப் பெண் இயேசுவினிடத்தில் வந்து, "ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்" என்று கதறத் தொடங்கினாள் (மத்தேயு 15:22). அவளை இயேசு புறக்கணிப்பவராகக் காட்சியளித்தார், மற்றும் சீஷர்கள் அவரைப் புறம்பே அனுப்பிவிட முயற்சி செய்தனர்; ஆனால் அவள் தனது மகளுக்காக இயேசுவினிடத்தில் தொடர்ந்து கெஞ்சினாள்: "ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்!" (வசனம் 25). கடைசில் இயேசு அவளை அவமானப் படுத்துவதாகக் காணப்பட்டார், ஆனால் அவள் செயல் விளைவில், "நான் வேண்டுவதெல்லாம் உமது வல்லமையில் ஒரு துணிக்கை மாத்திரமே" என்று பதில் அளித்தாள் (வசனங்கள் 26, 27). "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக, 'ஸ்திரீயே, *உன் விசுவாசம் பெரிது*; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார்' " (வசனம் 28; என்னால் வலியுறுத்தப்படுகிறது). அந்தப் புறதெய்வ வணக்க நகரத்தில் உண்மையின் தேவன்மீதான விசுவாசம் எவ்வாறு மேம்படுத்தபட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது, ஆனால் சாறிபாத்தின் விதவையிடத்தில் இருந்தது போலவே இந்தப் பெண்ணிடமும் அது நிலவியது.

இன்றைய நாட்களில் இன்னமும் நமக்கு விசுவாசத்தின் இல்லங்கள் தேவைப்படுகின்றன. சங்கீதக்காரர், "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" என்று கூறினார் (சங்கீதம் 37:5).

மூன்றாவதாக இது ஒரு கீழ்ப்படிதல் உள்ள இல்லமாக இருந்தது.

எலியா தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். அடுத்ததாக நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:

> கொண்டுவர அவள் போகிறபோது அவன் அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் அப்பமும் உன் கையிலே எனக்குக் கொண்டுவா என்றான். அதற்கு அவள்: பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள் (வசனங்கள் 11-15).

இதை மதித்து உணருவதற்கு நாம், முழுச் சித்தரிப்பையும் காண்பது

அவசியமாக உள்ளது. இந்த விதவை ஒரு யூதப்பெண்ணாக இருக்க வில்லை (அவள் "*உம்முடைய* தேவனாகிய கர்த்தருடைய" என்று கூறியதைக் கவனியுங்கள்). எங்கிருந்தோ ஒரு மனிதர், தீர்க்கதரிசியின் உடையை உடுத்தி யவராகத் தோற்றம் தந்தார். அவள் தனது மாவுப்பானை மற்றும் எண்ணெய்க் கலயத்தில் இருந்து கண்களை எடுத்துத் தேவனைக் கண்ணோக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்ததே அவர் செய்த முதல் விஷயங்களில் ஒன்றாக இருந்தது. மனிதக் கண்ணோக்கக் கருத்தின்படி, நயப்பாங்கற்ற தோற்றம் கொண்ட இம் மனிதர் கூறியது எவ்விதக் கருத்தையும் ஏற்படுத்தவில்லை. இருந்தபோதிலும், அவள் என்ன செய்யவேண்டும் என்று அவளுக்குக் கூறப்பட்டதோ அதை அவள் *செய்தாள்*! அவள் கீழ்ப்படிதல் உள்ளவளாக இருந்தாள்.

இன்றைய நாட்களில், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு அர்ப்பணித்துள்ள இல்லங்கள் நமக்கு எவ்வளவாகத் தேவைப்படுகின்றன!

நான்காவது, இது சுயநலமற்ற இல்லமாக இருந்தது.

நாம் இந்தச் சிறு இல்லமானது சுயநலமற்றதாக இருந்தது என்று கூறுவதன்மூலம் இதன் விசேஷித்த பண்புகளைத் தொகுத்துரைக்க முடியும். J. R. மெக்டஃப் என்பவர், அக்கினியின் தீர்க்கதரிசியான எலியா என்ற தமது உன்னத மான புத்தகத்தில், "வேதவசனத்தில் ஒருசில இனணகளை மாத்திரமே கொண்டுள்ள விசுவாசம் மற்றும் சுயநலமற்றதன்மை ஆகியவற்றின் ஒன்றிணைவுடன் அவள் எலியாவின் வேண்டுகோளுக்கு இணங்கி, அவரது வருத்தத்தை நீக்கக் கீழ்ப்படிதலுடன் துரிதப்படுகிறாள் மற்றும் தனது சமை யலறை நிலையடுக்கின் கடைசிச் சிறுதுளியை அவர் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறாள்" என்று எழுதினார்.[3]

வேதவசனங்களில் நாம் இன்னொரு விதவையைப் பற்றி நினைவூட்டப்படுகிறோம்: மாற்கு 12ல், தன்னிடம் இருந்த இரண்டு செப்புக்காசுகளைக் கர்த்தருக்குக் கொடுத்த ஏழை விதவை. இன்றைய நாட்களில் நம்மிடம் உதவி கேட்கப்படும்போது, அடிக்கடி நாம் நம்முடைய வசதியான வாழ்வை விட்டுக் கொடுப்பதற்குத் தயங்குகிறோம், ஆனால் இந்த விதவையும் சாறிபாத்தின் விதவையும் தாங்கள் வைத்திருந்த எல்லாவற்றையும் கொடுத்தனர்.

சுயநலமற்ற தன்மையில் விஷயம் எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! நாம் சுயநலமற்ற இல்லங்களை, ஒவ்வொருவரும் தங்களைக் குறித்தல்ல, ஆனால் இல்லத்தில் உள்ள மற்றவர்களைக் குறித்து அதிகமான அக்கறை கொண்டுள்ள இல்லங்களை; ஒவ்வொருவரும் தங்களைக் காட்டிலும் மற்றவர்களை அதி கம் முக்கியத்துவமானவர்கள் என்று மதிக்கிற இல்லங்களை அதிகமாகக் கொண்டிருந்தால் தேவன் அதிகமாக ஆசீர்வதிக்க முடியும் (பிலிப்பியர் 2:3); ஒவ்வொருவரும் மற்றவர்களின் சந்தோஷத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ள அதிகமான இல்லங்களை கொண்டிருந்தால் தேவன் நம்மை இன்னும் அதிக மாக ஆசீர்வதிக்க முடியும்!

## பரலோகத்தின் உறுதிப்பாடு

எலியா, தனக்கு முதலில் ஒரு அப்பத்தை ஏற்பாடு செய்யும்படி சாறிபாத் தின் விதவையிடம் கேட்டுக்கொண்டபோது, "கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும், பானையின் மா செலவழிந்துபோவதும்

*இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்துபோதும் இல்லை" என்று தேவன் கூறியிருந்ததாக அவர் அவளிடத்தில் கூறினார் (1 இராஜாக்கள் 17:14). அது அவளுக்குப் பரலோகத்தின் உறுதிப்பாடாக இருந்தது. அந்த உறுதிப்பாட்டைத் தேவன் மதித்துக் கனப்படுத்தினாரா? 15 மற்றும் 16ம் வசனங்களை நாம் தொடர்ந்து வாசிக்கிறோம்:*

> *அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை.*

*ஒவ்வொரு நாளும், அவர்கள் மாவுப் பானையைக் காலிசெய்து எண்ணெய் இருந்த கலசத்தில் இருந்து முழுவதும் ஊற்றி எடுப்பார்கள். அடுத்த நாளில் அவர்களுக்கு அந்த நாளுக்குத் தேவையானதற்கு அதிகமாக இருக்கும். அந்த நாளில் மாவுப்பானையும் எண்ணெய்க்கலசமும் காலியாக்கப்படும், ஆனால் அடுத்தநாளில் அந்த நாளுக்குப் போதுமானது இருக்கும். ஒரே ஒரு அற்புதம் மாத்திரம் நடக்கவில்லை; ஒவ்வொரு நாளும் அற்புதம் நடந்தது. இந்தச் சிறிய இல்லத்தைப் பரலோகம் எவ்விதமாக ஆசிர்வதித்தது!*

*பலவகையான உணவுகள் இருக்கவில்லை என்பது உண்மையே. மாவு மற்றும் எண்ணெய் ஆகியவற்றில் இருந்து நீங்கள் எதைச் சமைக்க முடியும்? உலர்ந்த சிறு ரொட்டிகள். அவர்கள் காலை உணவிற்கு உலர்ந்த சிறுரொட்டிகளையும் தண்ணீரையும் கொண்டிருந்தனர், இரவு உணவிற்கு உலர்ந்த சிறுரொட்டிகளையும் தண்ணீரையும் கொண்டிருந்தனர். நானும் எனது குடும்பத்தாரும் 1973ம் ஆண்டில் ஐரோப்பாவிற்கு, நாற்பத்தி ஐந்து நாட்கள் பயணமாகச் சென்றபோது,* ஒரு நாளில் 5-10 டாலர் செலவில் ஐரோப்பாவில் இருத்தல் *என்ற புத்தகத்தைப் பயன்படுத்தி எங்கள் உணவை உண்டதை நான் நினைத்துப் பார்க்கிறேன்.*[4] *நாங்கள், பாலாடைக் கட்டிகள், பழங்கள் மற்றும் ரொட்டி ஆகியவற்றை உபயோகித்தோம். அந்தப் பயணம் முடிவதற்கு முன்னர், எனது மூன்று சிறு மகள்களும் ஒரு பாடலை இயற்றிவிட்டனர்: "காலையில் பாலாடைக்கட்டி, மாலையில் பாலாடைக்கட்டி, இரவு உணவு வேளையில் பாலாடைக்கட்டி."*[5]

*பல வகையான உணவுகள் இல்லை என்றாலும், அந்த ஆசீர்வாதத்தை விதவை மதிக்கத் தவறினாள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவளது முகமானது தனது இளமை மற்றும் மலர்ச்சி ஆகியவற்றைத் திரும்ப ஆதாயப்படுத்திக் கொண்டதைக் கற்பனை செய்து பாருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவள் தனது மகன் இப்போது பலமாகவும் ஆரோக்கியமாகவும் மாறி, சூரிய ஒளியில் சிரிக்கவும் விளையாடவும் தொடங்கியதை அவள் கண்டதைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். அவள் அந்த ரொட்டிகளைச் சுடுகிறபோது பின்வருமாறு பாடுவதைச் சித்தரித்துப் பாருங்கள்:*

> *யெகோவா என்மீது அன்புகூருகிறார்!*
> *இதுவே எனக்குத் தெரியும்*
> *ஏனெனில் இந்த ரொட்டிகள்*

அவ்வாறு எனக்குக் கூறுகின்றன.[6]

ஒருவர், தாம் விரும்புகிறவற்றை அல்ல, ஆனால் அவருக்குத் தேவையானவற்றைக் கொண்டிருத்தல் என்பதே உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ள நிலையாக உள்ளது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் இப்போது நாம் பேசியிருக்கிற வகையின்படியான - விசுவாசத்தின் நபராக, கொடுக்கிற நபராக, கீழ்ப்படிதலுள்ள நபராக, சுயநலமற்ற நபராக - நபராக இருந்தால், தேவன் உங்களுக்கும் உங்கள் இல்லத்திற்கும்கூட குறிப்பிட்ட சில உறுதிப்பாடுகளை ஏற்படுத்தினார் எனலாம். லூக்கா 6:35, 38ஐப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> "... நன்மைசெய்யுங்கள், கைமாறுகருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; ... கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்."

அது, சாறிபாத் ஊரில் இருந்த விதவைக்கு ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தம் போன்று ஒலிப்பது இல்லையா? நாம் கண்டுள்ளபடி, அந்த வாக்குத்தத்தத்தைத் தேவன் காத்துக்கொண்டார். இப்போது இயேசு, "உங்களுக்கு நான் அதே வாக்குத்தத்தத்தை ஏற்படுத்துகிறேன்" என்று கூறுகிறார்!

மத்தேயு 25ல் நாம் இதைபோன்றதொரு வாக்குத்தத்தத்தைக் கண்டறிகிறோம். 34ம் வசனத்தில் இயேசு, தம் வலதுபுறத்தில் இருப்பவர்களிடம், "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். அவர்கள் ஏன் அவ்வித மாக ஆசீர்வதிக்கப்பட்டனர்? இதற்கான ஒரு காரணம் 35ம் வசனத்தில் தரப்பட்டுள்ளது: "பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமா யிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்." 40ம் வசனத்தில் இயேசு, "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று விளக்கப்படுத்துகிறார்.

இல்லத்தின் அன்றாடத்தேவைகள் பற்றிப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு வாக்குத்தத்தத்தை இயேசு ஏற்படுத்துகிறார்: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல் லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33). "இவைகள் எல் லாம்" என்பது சந்தர்ப்பப்பொருளில், உணவு, பானம் மற்றும் உடை என்ற வாழ்வின் தேவைகளைக் குறிக்கிறது. நீங்கள் விரும்புகிற யாவற்றையும் நீங்கள் கொண்டிராதிருக்கலாம், ஆனால் உங்களுக்குத் தேவையானவற்றை நீங்கள் கொண்டிருப்பீர்கள்.

இன்றைய நாட்களில் நமக்குத் தேவனுடைய அளிப்புகள், சாறிபாத் ஊரின் விதவையினுடைய விஷயத்தில் இருந்ததுபோன்று அற்புதமானவைகளாக

இருப்பதில்லை. படைப்பிற்குப் பின்பு, மனிதர்களின் வரலாற்றில் அற்புதங்களின் மூன்று மாபெரும் காலங்கள் இருந்துள்ளன; அவற்றில் ஒன்று, எலியா மற்றும் அவரைத் தொடர்ந்து வந்தவரான எலிசா ஆகியோரின் காலமாக உள்ளது. இது எஞ்சிய கால வேளையில் தேவன் செயலற்று இருந்தார் என்று அர்த்தப்படுவ தில்லை. எஞ்சிய காலவேளையில் அவர், தாம் படைத்திருந்த உலகத்தில், தமது மக்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதற்கு அருளிரக்கத்துடன் செயல்பட்டிருந்தார். அதுபோலவே, இன்றைய நாட்களிலும் தேவன் அற்புதவித மாக அல்ல, ஆனால் *அருளிரக்கத்துடன்* செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இன்றைய நாட்களில் தேவன் அற்புதவிதமாக செயல்படுவதில்லை என்றாலும், அவர் தமது மக்களுக்குத் தேவையானவற்றை அளிக்க முடியும் மற்றும் அளிப்பார். அவர் நமக்குத் தேவையானவற்றை அளிப்பார். அவ்வாறு செய்வதாக அவர் உறுதிப்பாடு ஏற்படுத்தியுள்ளார்!

> நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாம்பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா 41:10).

## முடிவுரை

சாறிபாத் ஊரின் விதவையினுடைய வரலாற்றில் இருந்து, நாம் ஒவ்வொருவரும் நமக்கென்று தனிப்பட்ட வகையில் ஒரு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவோமாக. தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிக்க விரும்புகிறார். இருப்பினும், தேவன் நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்றாலும், நாம் *கீழ்ப்படிதல்* உள்ளவர்களாக இருக்க வேண்டும். இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல் லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" என்று கேட்டார் (லூக்கா 6:46). உங்கள் வாழ்வு தேவன் ஆசீர்வதிக்கக்கூடிய வகையிலானதான வாழ்வாக உள்ளதா?

---

குறிப்புகள்

[1]காண்க ஆதியாகமம் 38:14, 19; உபாகமம் 24:17. [2]காண்க 1 இராஜாக்கள் 17:19. [3]J. R. MacDuff, *Elijah the Prophet of Fire* (Grand Rapids, Mich.: Baker Book House, 1956), 59. [4]கடந்தமுறை நான் ஆய்வுசெய்தபோது, அந்தப் புத்தகம் உண்மையில், *ஒரு நாளுக்கு 45 டாலர் செலவில் ஐரோப்பாவில் இருத்தல்* என்று அழைக்கப்பட்டது! [5]இது, "காலையில் சர்க்கரை" என்று பாடலின் மெட்டில் இயற்றப்பட்டது. [6]இந்தச் சிறியபாடலை "இயேசு என்னை நேசிக்கிறார்" என்ற மெட்டில் பாடமுடியும்.

## காட்சி - உதவிக் குறிப்புகள்

ஒரு எளிய ஆனால் செயல்விளைவுள்ள குறிக்கோள் பாடத்திற்கு, அந்த விதவை மாவைக் கலக்கும்போது பாடியது பற்றி நீங்கள் கூறும்போது, ஒரு பாத்திரத்தையும் கரண்டியையும் பயன்படுத்துங்கள். அந்தச் சிறிய பாடலை "இயேசு என்னை நேசிக்கிறார்" என்ற மெட்டில் பாடும்போது, கரண்டியால்

பாத்திரத்தினுள் கலக்குங்கள். நீங்கள் ஒரு மைக்ரோபோனைப் பயன்படுத்தினால், அது சத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படி பாத்திரத்தை மைக்ரோபோனுக்கு அருகாமையில் வைத்துக்கொள்ளுங்கள்.

---

## பாட வரைகுறிப்பு

அறிமுகம்

A. உலையினூடே கடந்து செல்லுதல் என்பது வேதாகமம் அடிக்கடி பயன்படுத்துகிற விவரிப்பாக உள்ளது. உலையினூடே கடந்து செல்லுதல் என்பது பயம்நிறைந்த ஒரு அனுபவமாக உள்ளது, ஆனால் உலையில் உயிர்பிழைத்திருக்கும் விஷயமானது மிகவும் பலம் உள்ளதாக மாபெரும் மதிப்புள்ளதாக இருக்கிறது.

1. இன்றைய நாட்களில் உலையினூடே கடந்து செல்லுதல் என்பதாக விவரிக்கப்படக் கூடிய விஷயம் ஏதாவது உள்ளதென்றால், அது இல்லமாக உள்ளது. உயிர்பிழைத்து இருக்கும் இல்லங்கள் பலமானவைகளாக உள்ளன!
2. "சாறிபாத்" என்ற வார்த்தை "அக்கினிச் சூளை" அல்லது "உருக்கும் கலசம்" என்று அர்த்தப்படுகிறது.
   a. சாறிபாத் ஊரானது எலியாவுக்கு ஒரு உலையாக இருந்தது.
   b. குறிப்பாக அது சாறிபாத் ஊரின் விதவைக்கு ஒரு உலைக்களமாக இருந்தது.

B. இந்தப் பாடத்தில் நாம், தேவன் சாறிபாத் ஊரில் இருந்த ஒரு சிறு இல்லத்தை எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதையும் இன்றைய நாட்களில் அவர் நமது இல்லங்களை எவ்வாறு ஆசீர்வதிக்கக்கூடும் என்பதையும் கவனிப்போம்.

I. பரலோகத்தின் அக்கறை

A. நாம் படிக்கும் வரலாற்றில் சற்றே நாம் பின்னோக்கித் திரும்பிச் செல்வோம்.

1. கேரீத் ஆறு வற்றிப்போனபோது, தேவன் எலியாவை சாறிபாத் ஊருக்கு அனுப்பினார் (1 இராஜாக்கள் 17:8-10).
2. அவர் [எலியா] அங்கு சென்றபோது, தேவன் எலியாவிடம் யாரைப் பற்றிக்கூறி இருந்தாரோ, அந்த விதவை இறப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறாள் (1 இராஜாக்கள் 17:10, 12)!

B. இந்தப் பாடத்தில் நாம் இந்த விதவையின்மீது கவனம் குவிப்போமாக.

1. அவளது வாழ்வில் ஒவ்வொரு விஷயமும் தீமையாக இருந்தது!
2. பரலோகம் அறிகிறது மற்றும் பரலோம் அக்கறை கொண்டுள்ளது!
   a. பரலோகம் எல்லா விதவைகளைக் குறித்தும் அக்கறை கொண்டுள்ளது (யாத்திராகமம் 22:22; உபாகமம் 14; 16; 24; 26; லூக்கா 7:12; யாக்கோபு 1:27).

b. *பரலோகம் இந்த விதவையைக் குறித்து குறிப்பாக அக்கறை கொண்டுள்ளது (லூக்கா 4:25, 26).*

C. *உங்கள் இல்லத்தில் நீங்கள் எவ்விதமான இடர்ப்பாடுகளினூடே கடந்து சென்றுகொண்டு இருந்தாலும், அதைப்பற்றிப் பரலோகம் அறிகிறது பரலோகம் அக்கறை கொண்டுள்ளது!*

II. *பரலோகத்தின் நிபந்தனைகள். இந்த இல்லத்திற்குப் பரலோகம் உதவ முடிந்தது, ஏனென்றால்:*

A. *இது கொடுக்கும் இல்லமாக இருந்தது (1 இராஜாக்கள் 17:10, 11; காண்க மத்தேயு 10:41, 42).*

B. *இது விசுவாசத்தின் இல்லமாக இருந்தது (1 இராஜாக்கள் 17:12; காண்க மத்தேயு 15:22-28; சங்கீதம் 37:5).*

C. *இது கீழ்ப்படிதல் உள்ள இல்லமாக இருந்தது (1 இராஜாக்கள் 17:11-15).*

D. *இது சுயநலமற்ற இல்லமாக இருந்தது (காண்க மாற்கு 12; பிலிப்பியர் 2:3).*

III. *பரலோகத்தின் உறுதிப்பாடு*

A. *எலியா அந்த விதவையினிடத்தில், முதலில் தனக்கு ஒரு அப்பம் சுட்டுக் கொண்டுவரும்படிக் கேட்டுக்கொண்டபோது, பரலோகத்தின் உறுதிப்பாட்டைக் குறித்து அவர் அவளிடத்தில் கூறினார் (1 இராஜாக்கள் 17:14).*

1. *அந்த உறுதிப்பாட்டைத் தேவன் கனப்படுத்தினார் (1 இராஜாக்கள் 17:15, 16).*

2. *அவர்களின் உணவில் பல வகைகள் இருக்கவில்லை, ஆனால் அது அந்த விதவைக்குப் பொருட்படுத்தப்படக்கூடிய விஷயமாக இருக்கவில்லை. அவளுடைய குடும்பம் இப்போது பராமரிக்கப்பட்டிருந்தது! "ஒருவர் தாம் விரும்புகிறவற்றைக் கொண்டிருத்தல் என்பதல்ல, ஆனால் ஒருவர் தமக்குத் தேவையானவற்றைக் கொண்டிருத்தல் என்பதே உண்மையாக ஆசீர்வதிக்கப்பட்டுள்ள நிலையாகும்."*

B. *நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால் மற்றும் இங்கு நாம் எடுத்துரைத்துள்ள வகையான நபராக இருந்தால், தேவன் உங்களுக்கும் உங்கள் இல்லத்திற்கும்கூட குறிப்பிட்ட சில உறுதிப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கிறார்.*

1. *தேவனுடைய பல வாக்குத்தத்தங்கள், அவர் இந்த விதவையிடம் ஏற்படுத்தியிருந்த வாக்குத்தத்தம் போன்றே ஒலிக்கின்றன. லூக்கா 6:35, 38; மத்தேயு 25:34, 35, 40. இல்லத்தின் அன்றாடத் தேவைகளைக் குறித்து நாம் பின்வரும் வாக்குத்தத்தத்தைப் பெற்றுள்ளோம்: மத்தேயு 6:33.*

2. *இன்றைய நாட்களில் நமக்குத் தேவனுடைய அளிப்புகள், எலியாவின் நாட்களில் இருந்தது போன்று அற்புதமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் அவைகள் இன்னும் மிகவும் உண்மையானவைகளாகவே இருக்கின்றன. தேவன் தமது மக்களை இன்னமும் பராமரிக்கிறார் (ஏசாயா 41:10)!*